மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட சங்கங்களின் பெயர்களைத்தான் நான் தெரிவித்தேன். அங்குள்ள ஏழு சங்கங்களின் விவரங்களை கொடுக்க வேண்டுமென்றாலும் கொடுக்கிறேன். என்னுடைய பதிலில் சிலவற்றை சொல்லாமல் விட்டு விட்டிருக்கிறேன். யார் யாரால் என்னென்ன தவறுகள் நடைபெற்றன என்பதைத் தான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். "Speak the truth even if it hurts because it is truth that hurts" என்று மகாத்மா காந்தியடிகள் சொல்லியதைத்தான் பின்பற்றி வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(4) கவன ஈர்ப்பு.

சென்னை நுங்கம்பாக்கம் காலேஜ் ரோடு சந்திப்பில் இரு அரசுப் பேருந்துகள் மோதிக்கொண்டதால் ஏற்பட்ட விபத்து குறித்து.

திரு. எ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, 21—2—1978ஆம் தேதி, சென்னை, நுங்கம்பாக்கம், காலேஜ் ரோடு சந்திப்பில் இரண்டு அரசுப் பேருந்துகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டதால் சுமார் 50-க்கும் மேற்பட்ட பயணிகள் விபத்துக்குள்ளாகியிருப்பது பற்றி—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, 21—2—1978 அன்று எம்.எக்ஸ். 2 என்னும் எண்ணுள்ள பேருந்து 17-டி (71 பயணிகளுடன்) தடத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நுங்கம்பாக்கம் காலேஜ் ரோடில் சென்று கொண்டிருந்தது. கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு நேராக அப்பேருந்தின் ஓட்டுநர் தன் முன்னால் சென்று கொண்டிருந்த ஒரு ஆட்டோ ரிக்ஷாவை கடந்து செல்ல முயன்றபோது அதே சமயம் எம்.சி. 664 எனும் எண்ணுள்ள பேருந்து 23-ஏ தடத்தில் (35 பயணிகளுடன்) எழும்பூரிலிருந்து கல்வி இயக்குநர் அலுவலகம் நோக்கி வந்துகொண்டிருந்தது. அச்சமயம் திடீரென்று குறுக்கே வந்த ஒரு டெம்போ வண்டியை தவிர்க்க

23-ஏ தடப் பேருந்தின் ஓட்டுநர் முயன்றார். இவைகள் காரணமாக இரு பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன.

இரு பேருந்துகளும் ஒத்துக்கொள்ளத்தக்க வேகத்தில் சென்று கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இம்மோதலில் 52 நபர்களுக்குக் காயங்கள் ஏற்பட்டன. காயமுற்றோரில் இருவர் ஓட்டுநர், ஒருவர் நடத்துனர். மீதி 49 பேர் பயணிகள் ஆவர். இவர்களுக்கு அரசு பொது மருத்துவமனை, ராயப்பேட்டை மருத்துவமனை மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனை இவைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

49 பயணிகளில் 47 பேர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்ட உடனேயே அனுப்பப்பட்டனர். ஒரு பயணிக்கு இடுப்பில் உட்காயம் ஏற்பட்டதால் அவர் அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்து, இப்பொழுது குணமடைந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டார். மற்றொரு பெண் பயணி ராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். 23-ஏ, தடத்தில் காயமுற்ற ஓட்டுநரும், நடத்துனரும் சிகிச்சை பெற்று திருப்பி அனுப்பப்பட்டுவிட்டனர். 17-டி தடத்தின் ஓட்டுநர் மாத்திரம் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சிறு காயங்களுக்காக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று திருப்பி அனுப்பப்பட்டு விட்டார். 17-டி தடத்தின் நடத்துனருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை.

இந்த விபத்திற்குள்ளான இரு பேருந்துகளிலும் இயந்திர ரீதியிலான கோளாறில்லை. ஓட்டுநர்களின் தவறான யூகமே இவ் விபத்திற்கு காரணமாகும்.

இந்தப் பேருந்துகளின் முன் பக்கத்திற்கு மட்டுமே சேதம். இதை சரி செய்வதற்கு ரூ. 8,600 செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

போலீஸ் இவ்விஷயத்தைப் பற்றி வழக்குப்பதிவு செய்துள்ளார்கள். 23-ஏ தடத்தின் ஓட்டுனரை போலீஸ் கைது செய்து ஜாமீனில் விடுவித்துள்ளனர். அவர் பேரில் நிர்வாகம் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 17-டி ஓட்டுநர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கள் ஓட்டுநர் அல்லது பராமரிப்பு பணியாளர்களின் கவனக்குறைவால் ஏற்பட்டிருந்தால் அவர்கள்மீது விரைவாகவும், கடுமையாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தை எல்லாப் போக்குவரத்து நிர்வாக இயக்குனர்களுக்கும் சமீபத்தில்

எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. மோட்டார் உதிரி உருப்புகள் நன்கு பரிசோதிக்கப்பட வேண்டிய அவசியத்தையும் அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

திரு. எ. ஆர். மாரிமுத்து : இந்த விபத்து நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால் திருச்சியில் கூட சோழன் போக்குவரத்து பேருந்துகள் இரண்டு மோதிக்கொண்டன. காரணம், சரியான பிரேக் இல்லையென்றும், வண்டி சரியான கண்டிஷன் இல்லை என்றும் சொல்லப்படுகிறது. ஓட்டுநர்கள் அஜாக்கிரதை காரணமாகவும் இப்படி நடைபெறுவதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே இவற்றையெல்லாம் தடுப்பதற்கான முயற்சிகளை, பிரேக் சரியாக இருக்கின்ற முறையிலும், வண்டிகள் சீரானபடி இருக்கிறதா என்று பார்வையிடுவதற்கு அரசாங்கம் உடனடியாக ஏதாவது முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அண்மையில் சோழன் போக்குவரத்தில் ஏற்பட்ட விபத்துக்கு பிரேக் ஃபெய்லூர் காரணம் அல்ல. இருந்தும், பிரேக் சரியாக இருக்கிறதா என்று பார்வையிடுவதற்கும், ஓட்டுநர்கள் அஜாக்கிரதையாக இராமல் பார்த்துக்கொள்வதற்கும் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். மெக்கானிக்கல் ஏற்பாடுகளை சரிசெய்வதற்கும் தகுந்த கண்காணிப்புடன் கவனித்து வருகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

(முற்பகல் 10-20)

(5) 1978–79 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1978–79ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தின்மீது பொது விவாதம், ஐந்தாம் நாள், திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.

* திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே; நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்ற 1978–79 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தம்முடைய நிதிநிலை அறிக்கையிலே இப்போது தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை ''வரும் நிதி ஆண்டு, முழு ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை இந்த அரசு தயாரித்து அவைக்கு அளிக்கும் முதல் ஆண்டாகும்'' என்று சொன்னார்கள். எனவே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூற்றுப்படி, அவர்கள்